17.11.2025

OS.180/2023

PW1- இசக்கிமுத்து – க/பெ நாகராஜன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.11.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. வழக்கை தாக்கல் செய்வதற்கு என் வழக்கறிஞருக்கு யார் தகவல் கூறினார் என்றால் நானும், என் தகப்பனார் மற்றும் என் கணவர் ஆகியோர் கூறினோம்.

2. பிராதிலும், முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும்.

3. வழக்கில் மொத்தம் எத்தனை தபசில் உள்ளது என்றால் 3 தபசில் சொத்துக்கள் உள்ளது.

4. 1வது தபசில் சொத்தில் எத்தனை சர்வே எண்கள் உள்ளது என்றால் 3 சர்வே எண்கள் 473/12, 473/16, 473/20 ஆகும். இதன் மொத்த விஸ்தீரணம் 85 சென்ட் ஆகும்.

5. இந்த 85 சென்டிற்கும் கிணற்றின் பாத்தியம் தான் 3ம் தபசில் என்றால் சரிதான்.

6. 1ம் தபசில் சொத்தும், 3ம் தபசில் சொத்தும் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் அப்பாவிற்கு பூர்விக வழியில் பாத்தியம் ஆகும்.

7. 1,3 தபசில் சொத்துக்கள் எவ்வாறு எனக்கு பாத்தியம் என்றால் என் திருமணத்தின் போது என் அப்பா என் பெயருக்கும், என் கணவர் பெயருக்கு ஆவணம் ஏற்படுத்தினார்.

8. வா.சா.ஆ.6 ஆவணம் தான் என் அப்பா என் பெயருக்கும், என் கணவர் பெயருக்கும் ஏற்படுத்திய கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

9. என் பிராதின் 4 வது பாராவில் வா.சா.ஆ.6 ஏற்படுத்தப்பட்ட பின்னரும் என் தகப்பனார் தான் 1,3 தபசில் சொத்துக்களை அனுபவம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் வெளியூரில் இருந்ததால் என் தகப்பனார் அனுபவம் செய்து வருகிறார்.

10. வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு மறுபயனில்லை என்றால் சரிதான். எனக்கு நன்கொடையாக கொடுத்தார்.

11. வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் படி 3ம் தபசில் சொத்தில் என் தகப்பனாருக்கு 16 ல் 3 பாகம் உள்ளது என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் படி 3ம் தபசில் சொத்தில் உள்ள ஆயில் மோட்டாரில் என் தகப்பனாருக்கு 16 ல் 3 பாகம் உள்ளது என்றால் சரிதான்.

13. 1,2 பிரதிவாதிகளும் 3ம் தபசில் சொத்தில் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளும் 3ம் தபசில் சொத்தில் உள்ள ஆயில் மோட்டார் மூலம் தண்ணீர் இறைத்தார்கள்

என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளும் ஆயில் மோட்டாரில் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரிதான்.

14. 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து என் தகப்பனார் ஒரு மின் இணைப்பு 3ம் தபசில் சொத்தில் பெற்றார் என்றால் சரியல்ல. என் பெயரில் என் தகப்பனார் தனியாக மின் இணைப்பு பெற்றார்.

15. மின் இணைப்பு பெற்ற பின் 1,2 பிரதிவாதிகளும் அந்த மின் மோட்டாரில் தண்ணீர் பாய்ச்சினார்கள் என்றால் சரிதான் சிறுதுகாலம் மட்டுமே பாய்ச்சினார்கள். மின் இணைப்பிற்கும், மின் மோட்டாருக்கும் எனக்கு பணம் கொடுத்தார்கள்.

16. 3ம் தபசில் சொத்தில் தண்ணீர் இல்லாததால் 1ம் தபசில் சொத்தில் தனியாக போர்வெல் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். அதே போல் 1,2 பிரதிவாதிகளும் அவர்களது சொத்தில் போர்வெல் அமைத்தார்கள் என்றால் சரிதான்.

17. போர்வெல்லில் இருந்து தான் 3ம் தபசில் சொத்திற்கு தண்ணீர் எடுத்து செல்வது வழக்கம் என்றால் சரியல்ல. போர்வெல்லில் இருந்து நேரடியாக நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவோம்.

18. மின் மோட்டார் அனுபவிப்பது சம்மந்தமாக தான் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இதைத்தவிர வேறு பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

19. 1ம் தபசில் சொத்திற்கு அடுத்த மேல்பக்கம் தான் பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

20. பிரதிவாதிகளின் சொத்தை தான் 4 மற்றும் 5 தபசில் சொத்தாக வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

21. 1ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். நானும் 4,5 தபசில் சொத்தில் உரிமை கோரவில்லை என்றால் சரிதான்.

22. 2ம் தபசில் சொத்து எனக்கும், 1ம் வாதிக்கும் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். 3ம் வாதிக்கு மட்டுமே 2ம் தபசில் சொத்து உரிமை என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

23. 2ம் தபசில் சொத்தை பொறுத்து வா.சா.ஆ1 முதல் 5 ஆவணங்களுக்கு எனக்கு சம்மந்தம் இல்லாததால் நான் அதை தாக்கல் செய்ய இயலாது எனவும் எனவே என் மூலம் வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்ய இயலாது என்றால் சரியல்ல.

24. வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களை பொறுத்து 3ம் வாதி மட்டுமே சாட்சியம் அளிக்க இயலும் என்றால் சரிதான் ஆனால் 2ம் தபசில் சொத்தின் வழியாகத் தான் 1ம் தபசில் சொத்திற்கு சென்றடைய முடியும்.

25. வாய்க்காலானது சர்வே எண்.473/7ல் உள்ளது என்றால் இல்லை சர்வே எண் 473/9 ல் உள்ளது.

26. வா.சா.ஆ.11 புகைப்படமானது தபசில் சொத்திற்கான புகைப்படம் இல்லை என்றால் சரியல்ல.

27. வா.சா.ஆ.11 புகைப்படம் யாரால் எடுக்கப்பட்டது என்றால் என் கணவர் நாகராஜனால் எடுக்கப்பட்டது.

28. வா.சா.ஆ.19 ஆனது சட்ட முறைக்கு உட்பட்டு தாக்கல் செய்யாததால் ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

29. பிரதிவாதிகள் எந்த தேதியில் குறிப்பாக என் அனுபவத்தை தடை செய்தார்கள் என நான் வழக்கு மூல விபரத்தில் குறிப்பிடாததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல 2020 முதல் பிரச்சனை செய்தார்கள்.

30. பிராது 1,3 அயிட்ட சொத்திற்கு என் பெயரிலும், என் கணவர் பெயரிலும் தனி பட்டா இல்லை என்றால் சரிதான்.

31. வா.சா.ஆ.12 ஆவணத்தின் படி அதில் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு தான் வா.சா.ஆ.12 ன் சர்வே நம்பர் பாத்தியப்பட்டது என்றால் சரிதான் நாங்கள் அவர்களிடம் தான் கிரையம் வாங்கினோம்.

32. தபசில் சொத்திற்கு நாளது வரை எங்களால் தீர்வை செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

33. 3ம் தபசில் சொத்தில் பிரச்சனை எழுவதால் பிரதிவாதிகள் தனியாக மின் இணைப்பு பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். எனவே தற்போது எனக்கு பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான்.

34. நான் வழக்கிற்காக கற்பனையாக வழக்கு மூலத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றும் பிரதிவாதிகள் 3ம் தபசில் சொத்தில் எங்கள் அனுபவத்தை தடை செய்யவில்லை என்றால் சரியல்ல.

35. பிரதிவாதிகள் மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும் என் தந்தை தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் தற்போதைய நிலவரம் என்ன என்றால் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை நாடச் சொன்னார்கள்.

36. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் பொய்யான புகார் என்பதால் தான் காவல் துறையினர் புகாரை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

37. நான் தாக்கல் செய்துள்ள புகார் மனு ஏற்பு ரசீதிற்கான அசல் புகார் தாக்கல் செய்யப்படாததால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

38. என் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.